பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 17 | சனிக்கிழமை | 04.11.2023 | கதிர் 357

# நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடினால் மக்கள் முடிவெடுப்பர்

## அரசுக்கு நாமல் எச்சரிக்கை

சர்வதேச நாணய நிதியத்துக்கு அமைய இந்த ஆட்சி செயற்பட்டால் ஆட்சியாளர்கள் தொடர்பில் நாட்டு மக்கள் இறுதி முடிவு எடுப்பார்கள் என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய இந்த ஆட்சி எடுத்துள்ள ஒரு சில தீர்மானங்களினால் நாட்டு மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மின்னுற்பத்தி கட்டமைப்பில் மாற்றுத் திட்டங்களைச் செயற்படுத்துவதை விடுத்து மின்கட்டண அதிகரிப்புக்கு மாத்திரம் அதிக கவனம் செலு ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!



அரகலய போராட்டத்தில் இளையோரின் முக்கிய கோரிக்கையாக இருந்தது முறைமை மாற்றம். அந்தக் கோரிக்கைக்கு செவிசாய்து புதிய இலங்கையை உருவாக்குவோம் என்று ஜனாதிபதி சிறிது காலம் கூறிவந்தார். விரைவில் அதனை மறந்துவிட்டார். அதுமட்டுமல்ல இளைஞர்கள் கோரிய முறைமை மாற்றம் என்று தெரிவித்து நாடாளுமன்ற நடவடிக்கைகளில் இளைஞர்களும் பங்கேற்பதற்கான வசதிகள் செய்யப்பட்டதுடன் அந்த முறைமை மாற்றம் நிறைவுபெற்றதாக ஜனாதிபதி திருப்திப்பட்டுக்கொண்டார். இப்படி அரசியல் முறைமை மாற்றம் கேலிக்கூத்தாக்கப்பட்டாலும், கிரிக்கெட்டில் மட்டும் அந்த முறைமை மாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது போன்று தோன்றுகின்றது.

உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியாவிடம் 302 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது இலங்கைக் கிரிக்கெட் அணி. வழக்கமாக இத்தகைய தோல்விகளைத் தொடர்ந்து அணித் தலைவர் பதவி விலகுவார். அல்லது பதவி விலக நிர்ப்பந்திக்கப்படுவார். ஆனால் இந்தத் தடவை விளையாட்டுத் துறை அமைச்சர் அதற்கு முற்றிலும் மாறாக தோல்விக்கான பழியை அணியைத் தெரிவுசெய்தவர்களே ஏற்கவேண்டும் என்று சொல்லிவிட்டார். ☞ 2

## யானை தாக்கிய அதிகாரி சிகிச்சை பயனின்றிச் சாவு

(எம்.ஏ.றமீஸ்)

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கான ஆசிரிய ஆலோசகர் வைத்தியசாலையில் சிகிச்ச பெற்று வந்த நிலையில் நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் சேவையாற்றி வந்த அட்டாளைச்சேனை பிரதேசத்தினைச் சேர்ந்த விஞ்ஞானப் பாட ஆசிரிய ஆலோசகரே இவ்வாறு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

ஒக்டோபர் 22 அதிகாலை வேளையில் தனது ☞ 2

## பலாலியில் நேற்று சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வாள்வெட்டு குற்றச்சம்பவங்களுடன் தொடர்புபட்டவர் என்கிற சந்தேகத்தில் பலாலி விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட முக்கிய சந்தேகநபர்களின் நெருங்கிய சகா இவர் என்று பொலிஸார் நம்புகின்றனர். இந்தியாவிற்குத் தப்பிச் சென்றிருந்த இவர், திரும்பி வரும்போது விமான நியைத்தில் கைது செய்யப்பட்டார்.

விமான ☞ 8

## ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு சபாநாயகருடன் நேற்றுச் சந்திப்பு

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினையை ஒழிப்பதற்கு இந்த ஆட்சி நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பிரதித் தலைவர் ஹைடி ஹாட்டேலா தலைமையிலான குழுவினிடத்தில் சுட்டிக்காட்டினார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பிரதித் தலைவர் ஹைடி ஹாட்டேலா தலைமையிலான ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தெற்காசியத் தூதுக் குழுவினர் சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேர்தனவைப் நாடாளுமன்றத்தில் சந்தித்தனர்.

இந்த ஐரோப்பிய நாடாளுமன்ற தூதுக்குழுவில் போலாந்து, ☞ 8

## ரணிலை சந்தித்துப் பேசினார் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது, இந்தியா -இலங்கைக்கும் இடையிலான வரலாற்று மற்றும் கலாச்சார ரீதியி லான பௌத்த தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கான வேலைத் ☞ 2

## பொலிஸ் மா அதிபருக்கு 3 வார சேவை நீடிப்பு

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிற்கு மேலும் மூன்று வார கால சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் அமுலாகும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்த சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிற்கு இதற்கு முன்னர் வழங் கப்பட்ட சேவை நீடிப்பு நேற்றுடன் நிறைவடைந்தி ☞ 2

## காஸ் விலை இன்று முதல் அதிகரிப்பு

லிட்ரோ எரிவாயு விலை இன்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. ☞ 8

## அரச வைத்தியர்கள் பணி நிறுத்தம் மாகாணங்களில் கைவிடப்பட்டது

மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அவசர மத்திய செயற்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது சங்கத்தின் அவரச மத்திய குழு கூட்டம் நடைபெற்றது. இதன்போது மாகாண மட்டத்தில் ☞ 2

## கொரிய பணிவாய்ப்புகளை அதிகரிப்பதற்கு இணக்கம்

கொரிய வேலை வாய்ப்புக்களுக்கு திறன் சார் பணியாளர்களை அதிகமாக அனுப்பி வைப்பதற்கும் தேவையான பயிற்சிகளை இலங்கையில் பெற்றுக் கொடுப்பதற்கும், திறன்சார் பணியாளர்களுக்கான ஒதுக்கீடுகளை மேலும் அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக கொரியாவின் சபாநாயகர் கிம் ஜின் பியோ, இலங்கையின் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் உறுதியளித்தார்.

கொரியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சியோல் நகரில் அமைந்துள்ள கொரியாவின் சட்டவாக்க சபையான கொரிய தேசிய சபையில் அந் நாட்டு சபாநாயகரைச் சந்தித்திருந்தார். இச்சந்திப்பின் போது இலங்கை சபாநாயகர் விடுத்த வேண் டுகோளுக்கு அமையவே கொரிய சபாநாயகர் மேற்கண்ட உறுதிமொழியை ☞ 2

## காலநிலை பல்கலைக்கழகத்திற்காக கொத்மலையில் 600 ஏக்கர் ஒதுக்கீடு

சர்வதேச காலநிலை பல்கலைக்கழகத்தை நிர்மாணிக்க கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்டிய 600 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற முதலாவது சர்வதேச காலநிலை மாநாட்டில் உரையாற்றியபோது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துதெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வந்து, நாங்கள் ☞ 8

## தேர்தல் சட்டங்களை திருத்த புதிய ஆணைக்குழு நியமனம்

நடைமுறை தேவைகளுக்கேற்ப தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்கும் அரசியல் கட்சிகளின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கும் தேவையான பரிந்துரைகளைவழங்க புதிய ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி ரணில் விக்மரசிங்க நியமித்துள்ளார்.

ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் மற்றும் ஜனா திபதி சட்டத்தரணி வெளிகே பிரியசாத் ஜெரார்ட் டெப் தலைமையில் இந்த ☞ 2

## சொத்து விவரங்களை விரைவில் நீதிமன்றில் சமர்ப்பிப்பார் மைத்திரி

### அவரே தெரிவிப்பு

சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

பொலன்னறுவையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர்நீதிமன்றம் பல அறிவுறுத்தல்களை முன்வைத்துள்ளது. 10 கோடி ரூபா நட்டஈடு செலுத்துமாறு ☞ 2

## டிஜிட்டல் பொருளாதாரத்துக்காக மனித வள மேம்பாடு அவசியம்

### ஜனாதிபதி வலியுறுத்து

டிஜிட்டல் பொருளாதாரம் என்பது தெரிவு மாத்திரமல்ல அது தேவையாகும் என்றும் அதற்காக கல்வித்துறையில் மனித வளத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற INFOTEL தகவல் தொழில்நுட்பக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நவீன இலங்கையைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் திட்டத்தின் படி ‘டிஜிட்டல் பொருளாதாரத்தை உயிர்ப்பிப்போம்’ என்ற தொனிப்பொருளில், தொழில்நுட்ப அமைச்சின் வழிகாட்டலின் கீழ், இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழில் கூட்டமைப்பான’ INFOTEL ஏற்பாட்டில் தகவல் தொழில்நுட்பக் ☞ 2

## இனி இது .....

போதாக்குறைக்கு இலங்கைக் கிரிக்கெட் சபை உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். அவர்கள் பதவி விலகாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்திருக்கிறார். கிரிக்கெட் சபையினர் தமது பதவிகளில் தொடர்வதற்கு எந்தவிதமான தார்மீகநெறிமுறையும் உரிமையும் கிடையாதுஎன்றுகொந்தளித்துள்ளார் அமைச்சர். அதனால் அவர்கள் பதவி விலகுவதுதான் சரியானது என்பது அவரது கருத்து.

அனுபவசாலிகளான ஆஞ்சலோ மத்தியூஸ் மற்றும் டினேஸ் சந்திமல் போன்ற வீரர்களைத் தெரிவு செய்யாமல் விட்டதே இந்த உலகக் கிண்ணத்தொடரில்இலங்கைஅணி இவ்வளவு மோசமான திறனை வெளிப்படுத்தியதற்குக் காரணம் என்றும் அவர் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அது மட்டுமல்ல ஜனாதிபதிக்கு அமைச்சர் எழுதிய கடிதம் ஒன்றில் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபடும் நிறுவனங்களுடன் தொடர்புபட்ட 'பிரான்ட்ஸ்' உடன் இலங்கைக் கிரிக்கெட் சபை இணைந்து செயற்படுகின்றது என்ற குண்டு ஒன்றையும் தூக்கிப் போட்டுள்ளார் அமைச்சர். அதாவது உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் இந்த மிக மோசமான செயற்பாட்டுக்கு 'மச் பிக்ஸிங்' போன்ற காரணங்கள் இருக்கலாம் என்பதைப் போன்ற பீதியைக் கிளப்பப் பார்க்கிறார் அமைச்சர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் உண்மையானவையான இல்லையா என்பது விசாரணைக் குரியது. முறையான தீவிரமான விசாரணை நடத்தப்பட்டு உண்மை வெளிக்கொண்டுவரப்படவேண்டும். ஆனால், இப்போது விளையாட்டுத் -துறை அமைச்சரின் குற்றச்சாட்டு, அவருக்கு எதிராக இலங்கைக் கிரிக்கெட் சபை ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திற்குப் பதிலாகவே வந்திருப்பதாகத் தெரிகின்றது.

விளையாட்டுத்துறைஅமைச்சரின் செயலற்ற தன்மையினால் அதன் செயற்பாடுகள்பலதடைபட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை முன்னதாகக் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியதை அடுத்து அமைச்சரும் ஜனாதிபதிக்குக்கடிதம்எழுதியுள்ளார்.

உண்மையான தவறு எங்கே என்று கண்டுபிடிக்காமல் இரு தரப்பினரும் இப்படி மாறி மாறி குற்றஞ்சாட்டிக்கொண்டிருந்தால் இலங்கைக் கிரிக்கெட் உருபட்ட மாதிரித்தான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

த்தப் படுகிறது. முறையற்ற வகையில் மின்கட்டணம் அதிகரிக்கப் பட்டுள்ளது.

2024ஆம்ஆண்டுமுதல்பெறுமதி சேர் வரி வீதத்தை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களைநெருக்கடிக்குள்ளாக்கிஅரச வருமானத்தைஅதிகரித்துவிட்டோம் எனசர்வதேசத்துக்குகாண்பிப்பதால் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது என்பதைஆட்சியாளர்கள்விளங்கிக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கைச்செலவுஅதிகரிப்பினால் மக்கள் மீண்டும் வீதிக்கிறங்கிப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளுக்கு அமைய அரசு செயற்பட்டால் ஆட்சி தொடர்பில் நாட்டுமக்கள்தீர்மானம்எடுப்பார்கள்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நாட்டு மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரவு செலவுத் திட்டம் காணப்பட்டால் கடுமையானதீர்மானம்எடுப்போம்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியைத் தோற்றுவித்தோம். இந்த ஆட்சி அதிகாரத்திற்கு வந்து ஒரு வருடமாகிவிட்டபோதும் பெரும் மாற்றங்கள் ஏதும் சமூகக் கட்டமைப்பில் ஏற்படவில்லை. நாட்டு மக்களைத் தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாக்கினால் மக்கள் போராட்டம்மீண்டும்தலைத்தூக்கும் என்றார்.

## யானை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயக் காணிக்கு சென்று கொண்டிருந்த அவரை எதிர்பாராத விதமாக காட்டு யானைகள் தாக்கியுள்ளன. அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றதாக அக்கரைப் பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை வேளை மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இவர் காட்டு யானைகளைக் கண்ணுற்று மோட்டார் சைக்கிளை பாதையில் நிறுத்தி வைத்துவிட்டு அருகிலிருந்த கால்வாய்க்குள் இறங்கி நின்றுள்ளார்.

ஒரு மணி நேரத்திற்கு மேலாக யானைகளின் நடமாட்டத்தினை காணாததால் மீண்டும் வீதிக்கு அவர் வந்த வேளையில், மரங்களின் பின்னால் மறைந்து நின்ற யானைகள் அவரை தாக்கி தூக்கி வீசியுள்ளன. இதனால் பலத்த காயங்களுக்கு உள்ளான அவரது கால் கைகளில் பெருமளவு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர்இவர்மேலதிகசிகிச்சைக்காக கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு கடந்த12தினங்களாகசிகிச்சைபெற்று வந்தநிலையில் உயிரிழந்துள்ளார்.

## அரச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தத்தினைநேற்றுநண்பகலுடன் கைவிடுவதற்குஇறுதிஇணக்கப்பாடு எட்டப்பட்டது.

தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள ஜனாதிபதியின் பதில் உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, தாம் அறிவித்துள்ள பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளில், மக்களை நேரடியாகப் பாதிக்கும் தொழிற்சங்க நடவடிக்கையைதற்காலிகமாகஇடைநிறுத்த தீர்மானித்துள்ளோம்.

ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகருடன்மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடு உள்ளிட்ட விடயங்களுக்கு அமைய, மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டவேலைநிறுத்தம் கைவிடப்படும் தீர்மானத்தினை நோக்கிநகர்ந்துள்ளோம். எனினும், எமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாது விட்டால் நாம் மீண்டும் போராடுவதற்கு தயங்கப்போவதில்லை என்றார்.

## டிஜிட்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காட்சி நவம்பர் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

டிஜிட்டல் மயமாக்கலை பாடசாலைகளில் முன்னெடுக்கும் போது, ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக அரச மற்றும் தனியார் துறைகளின் கூட்டு முயற்சி அவசியம்.

தொழில்நுட்ப மற்றும் பட்டம் பெற்றதன் பின்னரும், பாடசாலைக்குப் பின்னரான காலத்திலும் பயிற்சி வாய்ப்புகளை உருவாக்குவது முக்கியமாகும். அத்தோடு, இலாப நோக்குடன் அல்லது இலாப நோக்கம் இன்றி தொழில்பயிற்சிபிரிவினர் குறிப்பிட்ட பங்களிப்பை வழங்க வேண்டும். பயிற்சி தொழிலாளர்களின் கேள்விக்கமைய அதற்கு அவசியமான நிறுவனங்களை நிறுவ எதிர்பார்த்துள்ளோம்.

டிஜிட்டல் பொருளாதாரத்தின் மூலம் 16பில்லியன் டொலர் சந்தை இலக்கை அடைய வேண்டியதன் முக்கியத்துவத்தைஅறிந்துகொண்டு, சந்தை பிரவேசம் தொடர்பில் ஆழமாக சிந்தித்து, திட்டங்களை செயற்படுத்த வேண்டியதன் அவசியமாகும்.

உலகின் மிகப்பெரிய மரபணு அடையாளஅட்டைமுறைமையான ஆதார் அட்டைகளின் முக்கியத்துவத்தையும், இலங்கையின் டிஜிட்டல் புவிசார் தெரிவுக் கட்டமைப்புக்குள் அதனை உள்வாங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கைக்கு ஆதார் கட்டமைப்பைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலானபேச்சுஇந்தியஅரசுடன் முன்னெடுக்கப்படுவதாகவும் பயனாளிகளுக்கான நிதியைப் பகிர்ந்தளிக்கும் போது மேற்படி கட்டமைப்பின் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## சொத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசியல் பயணத்தில் நான் முறையற்ற வகையில் சொத்து சேர்க்கவில்லை. நீதிமன்றத்தின் கட்டளையை மதித்து 15 மில்லியன் ரூபா செலுத்தியுள்ளேன். மிகுதி தொகையை செலுத்த காலவகாசம் கோரியுள்ளேன்.

டிசம்பர்மாதம்30ஆம்திகதிக்குள் எனது சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவுபிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அந்த விபரங்களை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன். மறைக்கும் அளவுக்கு பெருமளவான சொத்துக்கள் என்னிடம் இல்லை.

குண்டுத் தாக்குதல் தொடர்பில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ஜனாதிபதி என்ற ரீதியில் எனக்கு அறிவுறுத்தில்லை என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு தொடர்பான முக்கிய தகவல்களை மறைத்த தரப்பினருக்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளும் வினைத்திறனான வகையில் இடம்பெறவில்லை. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தை முன்னிலைப்படுத்தி குறுகிய அரசியல் நோக்கத்துக்கான நான் இலக்குப்படுத்தப்படுகிறேன். நாட்டு மக்கள் உண்மையை விளங்கிக் கொள்வார்கள் என்றார்.

## பொலிஸ் மா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தது.

தற்போதையபொலிஸ்மாஅதிபர் சி.டி.விக்ரமரத்னவிற்கு இதற்கு முன்னர்மூன்றுதடவைகள்சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

முன்னதாக, மூன்று மாதங்கள் என்றஅடிப்படையில்இரண்டுசந்தர்ப்பங்களிலும், மூன்று வாரங்கள் அடிப்படையில் ஒரு தடவையும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## கொரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கினார்.

தற்பொழுது 20,00றக்கும் அதிகமானஇலங்கையர்கள்கொரியாவில் பணியாற்றி வருவதாகவும், திறன்சார்பணியாளர்கள்தொடர்பில் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடு படிப்படியாக அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் கொரிய சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கும்கொரியாவுக்கும் இடையில் ஏறத்தாழ ஐந்து தசாப்தகாலமாக நீடித்து வரும் இருதரப்புஉறவுகளைதொடர்ந்தும் வலுப்படுத்துவதற்கும் இரு நாட்டு சபாநாயகர்களும் இணங்கினர்.

இந்நாட்டின் கிராமிய விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கு கொரியாவில் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படும் ஸ்மார்ட் விவசாயத்திட்டத்தை இலங்கையில் நிறுவுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் இங்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், கொரியாவில் தற்பொழுது காணப்படும் மேம்பட்ட அரசாங்க சேவைக்குச் சமமான பொதுச்சேவையை இலங்கையில் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் அறிவுசார் ஒத்துழைப்பை வழங்குவதற்கும் இங்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

கொரியாவின் சர்வதேச முகவர் அமைப்பின் ஊடாக இதற்கான பயிற்சியைஇந்நாட்டின்பாராளுமன்ற பணியாளர்கள்உள்ளிட்டஅரசாங்கப் பணியாளர்களுக்கு எதிர்காலத்தில் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது குறித்தும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்த நாட்டில் கொரிய முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. முதலீடுகளுக்கு சாதகமான சூழலை மேலும் உருவாக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய கொரிய சபாநாயகர், இலங்கையில் கொரிய முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், சுற்றுலாத்துறையின் மேம்பாட்டுக்காக இலங்கைக்கு வரும் சில நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச சுற்றுலா விசா வழங்கும் வேலைத்திட்டத்தில் கொரியாவை உள்ளடக்குவது பற்றி எதிர்காலத்தில் பரிசீலித்துப் பார்ப்பதாக சபாநாயகர் இங்கு குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் கொரியாவின் தேசிய சபையின் உறுப்பினர்களும் இதில்இணைந்துகொண்டிருந்தனர். அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, நிமல் பியதிஸ்ஸ, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர, இலங்கைக்கான கொரியாவின் முன்னாள் தூதுவர் சந்துஷ் வொன்ஜின் ஜியோன் உள்ளிட்டவர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## ரணிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களுக்காக இந்திய அரசினால் 15மில்லியன்அமெரிக்கடொலர்களை அன்பளிப்புச் செய்வதற்கான இருதரப்பு ஆவணங்களும் பரிமாற்றிக்கொள்ளப்பட்டன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இந்த அன்பளிப்பானது இரு நாடுகளுக்கும் இடையிலான பௌத்த தொடர்பைப் பலப்படுத்தும் முக்கிய அம்சமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

பௌத்த விகாரைகளின் கட்டுமானம், புனரமைப்பு, கலாசார பரிமாற்றம் தொல்பொருள் ஒத்துழைப்பு, இரு நாடுகளும் அந்யோன்ய தாதுக்களைக் காட்சிப்படுத்தல், மத ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக் கொள்ளல்போன்றவிடயங்களுக்காக மேற்படி நிதி அன்பளிப்பைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

குறித்தஅன்பளிப்பை, இலங்கை பொருளாதாரத்தின் மாறிவரும் நிலைமையை கருத்திற்கொண்டு, இலங்கை ரூபாயிலிருந்து இந்திய ரூபா வரையிலான கையிருப்புரீதியான பரிமாற்றத்தை மேற்கொள்ள, இரு நாடுகளும் இணங்கியுள்ளதுடன், சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப அதனை மாற்றியமைக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த இணக்கப்பாட்டுக்கு அமைவான பரிமாற்றத்தின் மூலம் இராஜதந்திர ஆவணங்கள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமைஇந்திய - இலங்கை உறவுகளை மேலும் பலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான இணக்கப்பாட்டுக்கு அமைவான இருதரப்பு ஒப்பந்தம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் முன்னிலையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் புத்தசாசன சமய, கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன ஆகியோரால் பரிமாற்றிக்கொள்ளப்பட்டது.

இந்த அன்பளிப்பின் கீழ் நாடளாவிய பௌத்த விகாரைகளில் 10 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சூரிய சக்தி திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதோடு, அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் இதன்போது கைசாத்திடப்பட்டது. அதனையடுத்து இருநாட்டு பிரதிநிதிகளும் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

புத்தசாசன சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, நிதி அமைச்சு மற்றும திறைசேரியின் பொருளாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்டவர்களும், இந்திய இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளும் மேற்படி நிகழ்வில்கலந்துகொண்டிருந்தனர்.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுநியமிக்கப்பட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக் குழு சட்டத்தின் 2,3 ஆம் சரத்துக்கமையபுதிய ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக சுந்தரம் அருமை நாயகம், சேனநாயக்க அலிசெண்ராலாகே, ஜனாதிபதி சட்டத்தரணி நளின் ஜயந்த அபேசேகர, ராஜித நவின் கிறிஸ்டோபர் சேனாரத்ன, அஹமட் லெப்பை மொஹமட் சலீம், சாகரிகா தெல்கொட, எஸ்தர் ஶ்ரீயானி நிமல்கா பெர்னாண்டோ, விதரனகே திபானிசமந்தாரொட்ரிகோ ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

தற்போதுள்ள தேர்தல் சட்டங்களை ஆய்வு செய்வது, அவற்றைத் திருத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவது, அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஊடகங்களைச் சரியாகப் பயன்படுத்தத் தேவையான பரிந்துரைகளைவழங்குவதுஊடகங்களைச் சரியாகக் கையாள்வது தொடர்பிலான நெறிமுறைகளைத் தயாரிப்பது ஆகிய பணிகளை இந்த ஆணைக்குழு முன்னெடுக்கும்.

அத்துடன், பொது விவகாரங்களின்போது அரசியல், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் அதன் உறுப்பினர்களின் நடத்தை தொடர்பான ஒழுங்கு விதிகளுக்கான பரிந்துரைகளை இந்த ஆணைக்குழு வழங்கும். அத்துடன், அரசியல் கட்சிகளின் பதிவு மற்றும் பொதுமக்களுக்கு நம்பகத்தன்மையுடன் பொறுப்புக் கூறும் சட்டங்களை வலுப்படுத்தத் தேவையான தகவல்களையும் ஆணைக்குழு திரட்டும்.

பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், தேர்தல்அறிவிக்கப்பட்ட நாள் முதல் தேர்தல் நடத்தப்பட்டு முடிவுகள் வெளியாகும் நாள் வரையிலான இடைவெளியை குறைத்தல், தேர்தலின் போது வாக்குச்சீட்டு முறைமைக்கு மாறாக இலத்திரனியல் முறையில் வாக்களிக்கும் வாய்ப்பை உருவாக்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும்ஆணைக்குழுவுக்குஅறிவுறுத்தப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள வாக்காளர் களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும்இடையில்நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்கள், உள்ளக நாடாளுமன்ற ஒன்றியம் உள்ளிட்ட பல அமைப்புக்கள் அரசியல் கட்சிகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலுக்காக முன்மொழிந்திருக்கும் நியதிகள் தொடர்பிலும் இந்த ஆணைக்குழு கவனம் செலுத்தும்.

தேர்தல்களின் போதான பரப்புரைக்கு ஏற்படும் நிதிச் செலவுகளின் துரித அதிகரிப்பு, அரசியலில் பணத்தின் வகிபாகம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இந்த ஆணைக்குழு விரிவாக கவனம் செலுத்தவுள்ளது.

குற்றங்களில் ஈடுபடுபவர்கள் அரசியல் கட்சிகளில் நுழைதல், நிலையான அரசியல் கட்சிகளுக்கு மாறாக குறுகிய காலத்தில் வலுவிழக்கும் கூட்டணிகளை உருவாக்குதல்உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கையை குறித்த ஆணைக்குழுஆறுமாதங்களுக்குள் சமர்ப்பிக்கவுள்ளது.

# புத்தளம் – மதுரங்குளி பகுதியில் தனியார் சொகுசு பஸ் விபத்து

புத்தளம் மதுரங்குளி பகுதியில் மன்னாரிலிருந்து கொழும்பு சென்ற தனியார் சொகுசு பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பஸ் புதன்கிழமை மதியம் 12 மணியளவில் மன்னார் பஸ் தரிப்பிடத்தில் இருந்து புறப்பட்டு கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது மதுங்குளி பகுதியில் பட்டாரக வாகனம் ஒன்றுக்கு இடம் விடும் போது குறித்த பஸ் குடைசாய்ந்துள்ளது.

குறித்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த பயணிகள்எவருக்கும்எந்தஅசம்பாவிதங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்த விபத்து தொடர்பாக அப்பகுதி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (05)





# வடக்கு, கிழக்கில் மக்களைத் திரட்டி இந்த ஆட்சிக்குப் பதில் சொல்வோம்

## சிறிதரன் எம்.பி. எச்சரிக்கை

வடக்கு, கிழக்கில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்புகளை நிறுத்தாவிட்டால் வெகு விரைவில் பாரிய அளவில் மக்களைத் திரட்டி அரசாங்கத்திற்கு பதில் சொல்வோம் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கால்நடைப் பண்ணையாளர்களால் சித்தாண்டி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

மயிலத்தமடு, மாதவனைப்பகுதிகளில் உள்ள பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை, அம்பாறை மற்றும் பொலன்நறுவை பகுதிகளிலிருந்து வருகை தந்துள்ள சிங்கள விவசாயிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அதேவேளை தமிழர்களுடைய கால்நடைகளும் சுட்டுக்கொல்லப்படுகின்றன.

இதன் காரணமாக மட்டக்களப்பை சேர்ந்த கால் நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக இலங்கை அரசில் அங்கம் வகிக்கின்ற மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் மௌனமாக இருப்பதுடன் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களிலும் இந்த விடயம் தொடர்பாக முடிவு எட்டப்படவில்லை.

தமிழ் மக்களின் அடிப்படையான அவர்களின் நிலத்தைப் பறித்தல் என்பது அவர்களை வாழவிடாமல் அகற்றுவதற்கான முயற்சியாகும். அம்பாறையில் தமிழ் மக்களின் இருப்புகளையும் பிரதிநிதித்துவத்தையும் இழந்து- வரும் நேரத்தில் திருகோணமலையிலும் அதே நிலைமையை எதிர்கொண்டுள்ள காலச்சூழலில் தொடர்ந்தும் நாங்கள் பாதிக்கப்படுகின்றோம் வஞ்சிக்கப்படுகின்றோம்.

அதற்கு எதிராகவே மக்கள் போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆதரவு வழங்குவது என்பது எங்களது கடமையாகும். இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி அப்பகுதியில் உள்ள சட்டவிரோத குடியேற்றகாரர்களை அகற்றுமாறு கூறிய பின்னரும் அப்பகுதியில் புத்தர்சிலையை வைத்தார்கள், சட்ட விரோதமாக அம்பிட்டிய தலைமையிலான அராஜகக்குழு தொடர்ந்து செயற்பட்டுவருகின்றது.

அதுமட்டுமல்லாது, வாய் பேசாத மாடுகள் வெடிவைத்து கொல்லப்படுகின்றன. பௌத்தர்கள் மாடுகளைக் கொலைசெய்துவருவது அவர்களின் மதக்கொள்கைக்கு எவ்வாறு சரியானது எனக் கேட்கத்தோன்றுகின்றது. எனவே இதுதொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் விரைவில் நாங்கள் வடக்கு மற்றும் கிழக்கில் மாபெரும் மக்கள் அலையை உருவாக்கி அரசாங்கத்திற்கு ஒரு பதிலைக் கூறுவோம். – எனத் தெரிவித்துள்ளார். (05)

# தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

## இராகலையில் சம்பவம்

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹரஸ்பெத்த பகுதியில் சுமார் 1,000 அடி உயரம் கொண்ட தர்பனா எல மலை அடிவார பகுதியில் தலை வேறாக்கப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலத்தை இராகலை பொலிஸார் வியாழக்கிழமை மாலை மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் இராகலை ஹரஸ்பெத்த பகுதியில் வசிக்கும் மலிந்த தில்ான் (வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது –

சடலமாக மீட்கப்பட்ட மலிங்க தில்ான் தனது வீட்டில் தாய், தந்தையரை தாக்கி 'நான் எங்காவது போய் எனது உயிரை மாய்த்துக்கொள்வேன், எனது உடல்கூட உங்களுக்குக் கிடைக்காது' என கூறிவிட்டு கடந்த முதலாம் திகதி மாலை வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இதையடுத்து, பெற்றோர்களும் இராகலை பொலிஸ் நிலையத்திற்கு விரைந்து தனது மகன் மது அருந்திவிட்டு தங்களை தாக்கிவிட்டு கோபத்தில் வீட்டைவிட்டு சென்றார் என முறைப்பாடு செய்துள்ளனர்.

அதேநேரத்தில் கோபத்தில் சென்ற மகன் வீட்டுக்கு வந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் இருந்துள்ளதாகவும் விசாரணையில் தெரிவித்தும் உள்ளனர்.

இந்நிலையில், வியாழக்கிழமை மாலை இளைஞரின் வீட்டாருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அந்த அழைப்பில் தன்னை அடையாளப் படுத்திகொள்ளாத நபர் தர்பனா எல மலை அடிவாரத்தில் சடலம் ஒன்று கிடப்பதாக தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, இத் தகவலை பெற்றோர் இராகலை பொலிஸ் நிலையத்திற்கு தெரிவித்துள்ளனர். பின் தர்பனா எல மலை அடிவாரத்திற்கு விரைந்த இராகலை பொலிஸார் அங்கு தலை வேறு உடல் வேறாக கிடந்த இளைஞரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

அதேநேரத்தில் உயிரிழந்திருப்பதாக தமது மகன் என பெற்றோர்களும் அடையாளம் காட்டியுள்ளனர்.

பின் சம்பவம் தொடர்பில் வலப் பனை நீதிவான் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ள பொலிஸார் இந்த சம்பவத்தில் உயிரிழந்த நபர் தன்னுயிரை மாய்த்துக்கொண்டாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், தர்பனா எல மலை சுமார் ஆயிரம் அடி உயரம் கொண்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார் இம் மலை உச்சியிலிருந்து இந்த இளைஞன் வீழ்ந்துள்ளமையால் உடல் பாகங்கள் சிதறி மரணம் சம்பவித்திருக்கலாம் எனவும் தெரிவித்தனர்.

மேலும், சம்பவத்தில் உயிரிழந்த இளைஞரின் உடல் மரண விசாரணையின் பின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலிய மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை இராகலை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (05)

# முதலீட்டாளர்கள் விரும்பாத இடமாக இலங்கை மின்கட்டண வரி அதிகரிப்பினால் மாறுகின்றது

## திலும் அமுனுகம சாட்டை



அதிகரித்த மின் கட்டணங்கள் வரிகள் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான செலவுகள் மிகவும் அதிகரித்து செல்வதால் இலங்கை முதலீட்டாளர்கள் விரும்பாத இடமாக மாறிவருகின்றது என தெரிவித்துள்ள அமைச்சர் இதன் காரணமாக இலங்கையில் முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களை கேட்டுக்கொள்வது புதிய சவாலாக மாறிவருகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

அதிகரித்துவரும் மின்கட்டணமே முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்யுமாறு கேட்டுக்கொள்வதில் கடுமையான சவாலாக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் வர்த்தக சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது வர்த்தக நடவடிக்கைகளிற்கான செலவுகள் அதிகரிப்பதால் உள்ளூர் உற்பத்திகளால் வெளிநாட்டு சந்தையில் போட்டிபோட முடியாத நிலை காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்கட்டண அதிகரிப்பு குறித்து உங்கள் நிலைப்பாட்டையை ஹிநானும் கொண்டுள்ளேன் இது எங்கள் ஏற்றுமதிகளை பாதிக்கின்றது நாளாந்தம் அதிகரிக்கும் செலவுகள் முதலீட்டாளர்களை கொண்டுவரும் எங்கள் முயற்சிகளை சவால் மிகுந்தவையாக மாற்று கின்றன ஏற்கனவே இங்கு முதலீடு செய்தவர்களை தக்கவைப்பதும் சவால் மிகுந்ததாக காணப்படுகின்றது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (05)

# தந்தை செலுத்திய மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி 16 வயதான மகள் சாவு

மோட்டார் சைக்கிள் விபத்தில் 16 வயது மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.


குறித்த மோட்டார் சைக்கிள் வீதியில் சறுக்கி எதிர்த்திசையில் வந்த பஸ் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து வியாழக்கிழமை மாலை மாவத்தகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கம்பிலிதிகொட விஹாரைக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரும் அவரது மகளும் மாவத்தகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் 16 வயதுடைய மகள் மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

கஹபட்வல பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (05)

# மன்னிப்பு கோரினார் சுமண ரத்ன தேரர்



தென்னிலங்கையிலுள்ள தமிழர்களை வெட்டுவேன் என சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்த அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் மன்னிப்பு கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக காணொளி ஒன்றை வெளியிட்டு தனது கருத்தை அவர் பதிவு செய்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

மட்டக்களப்பு, ஜயந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள மயானம் கடந்த 21ஆம் திகதி தரைமட்டமாக்கப்பட்டது. அங்கு எனது தாயின் சமாதியும் உள்ளதால் பொலிஸாருடன் அந்த பகுதிக்கு சென்று பார்வையிட்டேன்.

இதன்போது சிலர் என்னை தூண்டும் வகையில் காணொளிகளை எடுக்க ஆரம்பித்தமையால் நானும் கோபத்தில் சில கருத்துகளை வெளியிட்டிருந்தேன். இதனை தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர், தமிழ் மக்களை குழப்புவதற்காக பயன்படுத்தி வருகிறார்கள்.

நான் கூறிய கருத்துகள் இனவாதத்தை தூண்டும் கருத்துகள் என தமிழ் மக்களிடம் கூறிவருகிறார்கள். விசேடமாக, கூட்டமைப்பின் உறுப்பினர் இரா. சாணக்கியன் இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், நான் ஒரு பைத்தியக்காரன் என்றும் எனது தாயின் சமாதி இங்கே இருக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்தே சாணக்கியன்தான் இந்த மயானத்தை உடைக்க பணித்துள்ளார் என நான் தெரிந்து கொண்டுள்ளேன். அப்படி அவர் செய்யாவிட்டால் இந்த செயற்பாட்டை ஏன் அவர் சரியாக காண்பிக்க முற்பட வேண்டும்? இது தொடர்பாக நீதிமன்றத்துக்கு சென்றபோது, மயானத்தை தரைமட்டமாக்கிய தரப்பினர் குற்றத்தை ஒப்புக்கொண்டதோடு, மீண்டும் மயானத்தை அமைத்துத் தருவதாகவும் கூறியுள்ளனர்.

நானும் தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோருவதாக நீதிமன்றத்திடம் அறிவித்தேன். நான் கவலையுடன் தான் அன்று அவ்வாறு பேசினேன்.

இது இனவாதக் கருத்துக்கிடையாது. தனி ஈழம் வரப்போவதாகத் தெரிவித்து, தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காகவே சில நபர்கள் இவற்றைப் பயன்படுத்துகிறார்கள். இதனை அனைத்து மக்களும் புரிந்துகொள்ள வேண்டும். – என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காவல் மா அதிபர் நியமன இழுபறி

காவல் மா அதிபர் பதவிக்கு புதியவர் ஒருவரைத் தெரிவு செய்ய முடியாமல் நான்காவது தடவையாக தற்போதைய காவல் மா அதிபருக்கே பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. மீண்டும் ஒரு தடவை மூன்று வாரங்களுக்கு அவருக்குப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரசுத் தலைவரால் இந்தப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக மூன்று மாதங்கள் என்கிற அடிப்படையில் அவருக்கு இரு பதவி நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

காவல்மாஅதிபர்சி.டி.விக்ரமரத்னவிற்குமூன்றாவது தடவையாகப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டபோதே அதனை அரசமைப்புச் சபை நிராகரித்திருந்தது. தொடர்ந்து பதவி நீடிப்பு வழங்க முடியாது, நிரந்தரமான காவல் மா அதிபர் ஒருவரை நியமனம் செய்யவேண்டும் என்று அந்த பதவி நீடிப்பை நிராகரித்தது அரசமைப்புச் சபை. அப்போது வெளிநாட்டில் இருந்தார் ஜனாதிபதி. அங்கிருந்தபடியே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி காவல் மா அதிபரை மீண்டும் பதவியில் அமர்த்தினார்.

இந்த நிலையில் கார்த்திகை 9 அரசமைப்புச் சபை மீண்டும் கூடவுள்ளது. நேற்று வரையில் புதிய காவல் மா அதிபரின் பெயர் சபைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. கடந்த தடவையே பொலிஸ் மா அதிபரின் பதவி நீடிப்புக்குத்தமது அனுமதிதேவையில்லைஎன்றுஎகிறிய சபை, இந்தத் தடவை சி.வி.விக்ரமரத்னவின் பெயர் மீண்டும் அனுப்பப்பட்டால் அதனையும் நிராகரிக்கும் வாய்ப்புக்களே அதிகம் இருக்கின்றன.

7 மாதங்களுக்கும் மேலாக ஒரு புதிய காவல் மா அதிபரைத் தெரிவு செய்ய முடியாத அளவிற்கு ஆளும் தரப்புக்குள்என்னநெருக்கடிஎன்பதுதெரியவரவில்லை. இன்னும் புதிய காவல் மா அதிபர் எவரும் தெரிவு செய்யப்படவில்லை என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் தெரிவித்திருக்கிறார்.

அடுத்த காவல் மா அதிபர்களாக வருவதற்கான தகுதியுடைய இருவர் மீது மனித உரிமைகள் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இதனால் பொது அமைப்புக்கள் அவர்களை காவல் மா அதிபராக நியமிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. அவர்களில் ஒருவர் பொ–துமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸின் பரிந்துரைக்குரியவர்.

எதிர்ப்புக்களைஅடுத்தோஎன்னவோஅரசுத்தலைவர் புதிய காவல் மா அதிபர் தெரிவை ஒத்திவைக்கத் தொடங்கினார். அது 7 மாதங்களுக்கும் மேலாகியும் தொடர்கின்றது. இது காவல்துறையில் நிச்சயமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. தான் பதவி விலகிச் செல்கின்ற ஒருவர் என்பதால் சி.டி.விக்கிரமரட்ன ஆணித்தரமான முடிவுகளை எடுத்துச் செயற்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றார் என்றும் அதனால் காவல்திணைக்களம்ஒருமுழுமையானதலைமைத்துவம் இல்லாது இயங்குகின்றது என்றும் ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள்எழும்பத் தொடங்கிவிட்டன. குறிப்பாக பாதாள உலகக் குழுவினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் அதிகரிப்பு இந்த விமர்சனத்தையும் கண்டனத்தையும் எழுப்பி வருகின்றது.

நாடு முழுவதும் அதிகரித்துள்ள ஆயுதக் கலாசாரம் மற்றும் பழிக்குப் பழி கொலைகள் காவல்துறையின் உறுதியற்ற தன்மையாலேயே அதிகரித்திருக்கின்றன என்ற கண்டனங்கள் ஒருபுறத்தில் வலுத்து வந்தாலும் புதிய காவல் மா அதிபர் பதவிக்கான நியமனத்தை அரசுத்தலைவர்தாமதிப்பதன்நோக்கம்என்னவென்பது வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை. இது முற்றிலும் அபத்தமான ஒரு காரியம்.

நாட்டின்சட்டம்ஒழுங்கைப்பேணிக்காக்கும்துறைக்கு ஒரு தெளிவான தலைதத்துவத்தை வழங்க மறுப்பதன் மூலம் அரசுத் தலைவர் நாட்டில் ஒரு நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவது ஏற்புடையதுமல்ல. எனவே உடனடியாக காவல் மா அதிபர் ஒருவரை குற்றச்சாட்டுக்களுக்கு அப்பாற்பட்டவராக நியமனம் செய்ய அரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# மொட்டுவின் கட்டுப்பாட்டில் ரணில் ஏன் இல்லவே இல்லை?

உபுல் யோசப் பெர்னான்டோ



மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை பதவியில் இருந்து அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீக்கியதன் மூலம் அவருக்கும் ரணிலுக்கும் இடையிலான முதலாவது முரண்பாடு தோற்றம் பெற்றது. இருந்தாலும் இந்தத் தீர்மானம் மைத்திரிபாலவினால் மட்டும் எடுக்கப்பட்டதல்ல, பிரதமர் ரணிலுடன் கலந்துரையாடி, அதற்கு ரணில் தயக்கத்துடன் சம்மதித்த பின்பே எடுக்கப்பட்டது. மைத்திரிக்கு விருப்பமான ரணிலின் உத்தியோகபூர்வமற்ற பிரதியமைச்சர் மலிக் சமரவிக்ரமவினால் இந்திரஜித்தின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. ரணிலும் அதை எதிர்க்கவில்லை.

ரவி கருணாநாயக்கவை நிதியமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறு கூறுவதற்கு முன்னரும் ரணிலிடம் மைத்திரி ஆலோசனை நடத்தினார். ரணிலுடன் ஆலோசனை நடத்தியே மங்களவை நிதியமைச்சராகவும், திலக் மாரப்பனவை அயலுறவுத்துறை அமைச்சராகவும் நியமித்தார்.

2018 உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடைந்த பின்னர், ரணிலின் நெருங்கிய கூட்டாளியான சாகல ரத்நாயக்கவை பொலிஸ் துறைக்குப் பொறுப்பான பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு கோரிய மைத்திரி, ரஞ்சித் மத்துமபண்டாரவை அந்த இடத்திற்கு நியமித்து, பின்னர் ரணிலுடன் ஆலோசனை நடத்தி தெற்கு அபிவிருத்தி அமைச்சராக சாகலவை நியமித்தார்.

மைத்திரி ஜனாதிபதியாக வருவதற்கு மகிந்தவிடமிருந்து பிரிந்து மைத்திரியுடன் சேர்ந்த அமைச்சர்களின் வாக்குகள் இருந்தனவாயினும் 50% வாக்குகளுக்கும் மேலானவை ஐக்கிய தேசியக் கட்சி பங்களிப்பு. இருந்தபோதிலும், மைத்திரி ஒவ்வொருமுறை அமைச்சரவையைமாற்றியமைத்தபோதும், ரணிலின் ஆலோசனையுடனேயே அதனைச் செய்தார். ரணிலுடன் கலந்தாலோசிக்காமல் அவர் செய்தது ரணிலைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு ரணிலுடன் இணைந்து பணியாற்றுவது சாத்தியமற்றது என்பதை உணர்ந்து நாடாளுமன்றத்தைக் கலைத்தது மட்டும்தான்.

மைத்திரி - ரணில் கூட்டாட்சியின்போது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைத்தக்கவைத்திருந்தது பிரதமர் ரணில் தான். இந்த உண்மையே அமைச்சரவை மாற்றத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் ரணிலிடம் ஆலோசனை கேட்க வேண்டும் என்று மதித்திரியை தூண்டியது. மைத்திரியுடன் பேசும்போதெல்லாம் ஆட்சி தனக்கே சொந்தம் என ரணில் முனகிக் கொண்டிருந்தார்.

"அப்படியானால்மொட்டுக்கட்சி ஏன் அவ்வாறான தனது சக்தியை ரணிலிடம்பயன்படுத்தவில்லை?"

மொட்டுவிற்கு இன்று அந்தப் பலம் இல்லை. அதற்குக் காரணம் மொட்டுவின் அனுமதியின் பேரில் ரணில் தினேஷை பிரதமராக நியமிக்கப்பட்டமைதான். மொட்டுவினால் ரணிலுக்கு ஜனாதிபதிப் பதவியும் தினேஷுக்கு பிரதமர் பதவியும் வழங்கப்படுவதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது, சஜித் பிரேமதாச ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வந்துவிடுவார் என்ற அச்சம். இரண்டாவதாக ஒரு ராஜபக்சே ஜனாதிபதியாகிவிடுவாரோ அல்லது பிரத மராகிவிடுவாரோ என்ற அச்சம். மொட்டுக் கட்சி ரணிலுக்கு ஜனாதிபதி பதவியை வழங்கி, ஜி.எல். பீரிஸ், டலஸ் அழகப்பெரும அல்லது கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேரா ஆகியோரில் ஒருவரைப் பிரதமர் ஆக்கியிருந்தால்மொட்டுஇன்றுரணிலின் சால்வையாக மாறியிருக்காது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மொட்டுக் கட்சியின் நம்பிக்கையை வென்றவர், அதன் தலைவராகவும்இருந்தவர். டலஸ் அழகப்பெரும, பீரிஸைவிடவும் மூத்தவர். கட்சியின் எக்சத் ஜனதா நிதஹஸ் சந்தனய என்கிற அமைப்பில் இன்னும் முன்னணி உறுப்பினர். கோடீஸ்வர வர்த்தகரான தம்மிக்க பெரேரா அரசியலுக்குப் புதியவர் என்றாலும் பொது ஜன பெரமுன கட்சியின் மிதக்கும் வாக்குகளை வென்றெடுக்கக்கூடியவர். ஆனால் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவோ கட்சியின் உறுப்பினரும் அல்லர், இந்தப் போட்டியில் பங்கெடுக்கும் தலைவரும் அல்லர்.

மக்கள்ஐக்கியமுன்னணியின் தலைவர் அவர், ராஜபக்சவிடம் அமைச்சர் பதவியை எதிர்பார்த்திருந்தவர். விமல் வீரவன்ஸ, உதய கம்பன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றோரைப் போலவே சிறு கட்சி ஒன்றின் தலைவர். கோட்டாபய அமைச்சுப் பதவியில் இருந்து விமல் மற்றும் உதய ஆகியோரை நீக்கியபோது, அந்த நடவடிக்கைக்கு எதிராக தினேஷ் ஒரு வார்த்தைகூடப் பேசியவரில்லை. காரணம், விமல், உதயாவை விட தினேஷுக்கு அமைச்சுப் பதவி அவசியமாக இருந்தது. அப்படியானால் தினேஷ் ராஜபக்சக்களின் கீழ்ப்படிதலுள்ள சீடன் என்று ராஜபக்சக்கள் நினைத்திருக்க வேண்டும். ஆனால், உண்மை என்னவென்றால், தினேஷ் ராஜபக்களின்விசுவாசமானசீடர்அல்லர், மாறாக அமைச்சுப் பதவிகளுக்குவிசுவாசமானவர். ரணில் ஜனாதிபதியாவதற்கு முன்பே இதை நன்கு புரிந்து வைத்திருக்கவேண்டும். அதனால்தான் தினேஷை பிரதமராக்கச் சம்மதித் தார்.

### "தினேஷை பிரதமராக முன்மொழிந்தது யார்..?"

தினேஷ் நியமனம் இன்னும் மர்மமாகவே உள்ளது. தினேஷை பிரதமராக்க மஹிந்த விரும்பியிருக்கலாம். ராஜபக்ச இல்லாத வேறு யாராவது ஒருவர் பிரதமராகிவிடுவாரோ என்ற பயத்தில் பஸில் அதை விரும்பியிருக்கலாம். தினேஷை பிரதமராக்கினால் தனது பட்டத்து இளவரசர் பதவியைக் காப்பாற்றி விடலாம் என நாமலும் நினைத்திருக்கவேண்டும். தினேஷை பிரதமராக்குவதன் மூலம் அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம், அரச முடிவுகளை எடுப்பது, அதிகாரிகளைநியமிப்பதுபோன்றஅதிகாரங்களைக் கைப்பற்ற முடியும் என ராஜபக்சக்கள் நினைத்திருக்கலாம். ராஜக்சக்கள் தினேஷை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பினார். ஆனால் அதற்கு முன்னரே தினேஷை ரணில் தனது சட்டைப் பையில் போட்டுக் கொண்டார்.

தினேஷ் 21ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் அதிகாரம் பெற்ற பிரதமர் ஆவார். ஆனால் அவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார் போன்று தெரியவில்லை. 20ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் பிரதமர் பதவியை வகிப்பதாகநினைத்துக் கொண்டு அவர் பிரதமர் பதவியில் செயற்படுகின்றார்.

"ஜி.எல், டலஸ் அல்லது தம்மிக்க பெரேரா பிரதமராகியிருந்தால் என்ன நடந்திருக்கும்...?"

ஜி.எல், டலஸ் அல்லது தம்மிக்க பிரதமராகியிருந்தால் ரணிலுக்கு இந்த ஆட்டம் கிடைத்திருக்காது. அப்படியானால் அமைச்சர்களை நியமிப்பது மற்றும் அமைச்சரவையை மாற்றியமைப்பது எப்படி என்பதை ரணில் நிச்சயமாக ஜி.எல்., டளஸ் அல்லது தம்மிக்கவிடம் கேட்கவேண்டும். அப்படிநடந்தால், நாடாளுமன்றப் பெரும்பான்மை ரணிலின் தலைமையில் அல்ல, ஜி.எல், டலஸ் அல்லது தம்மிக தலைமையில் இருக்கும். அவர்கள் 'மொட்டுக் கட்சியின்' ஆளுநர் சபை உறுப்பினர்கள். அவர்கள் மொட்டின் உறுப்பினர்கள்.

அவர்களை மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சூழ்ந்துள்ளனர். தாம் சொல்வதை ரணிலைக் கேட்க வைப்பதன் மூலம் மொட்டுவின் நம்பிக்கையைப் அவர்களால் பெறமுடியும். தினேஷுக்கு அப்படியொரு பிரச்சினை இல்லை. தினேஷ் ஒரு தனி மனிதன். ரணில் பாதுகாப்பாக இருந்தால் தானும் பாதுகாப்பாக இருப்பார் என நினைக்கிறார். ரணில் மொட்டுவைக்கூட உடைத்து பிரதமர் பதவியைக் காப்பாற்றி விடுவார் என்று அவர் நினைத்துக்கொண்டிருக்க வேண்டும். அதனால்தான், தேசியப் பிரச்சினையில் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் தொடர்பான கொள்கைகளில் அவருக்கும் மக்கள் ஐக்கிய முன்னணியின் கொள்கைகளுக்கும் துரோகம் செய்து ரணிலுடன் இணைந்து நிற்கிறார். மொட்டுக்கட்சிசாம்பலில் இருந்துஎழநினைத்தால், தினேஷை அகற்றுவதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். தினேஷ் பிரதமராக இருக்கும் வரை மொட்டுவிற்குச் சிறகுகள் கிடைக்காது. அதுமட்டுமின்றி, தினேஷ் தங்கினால் காய் கீழே விழுந்துவிடும்.

தினேஸ் பிரதமரானதும் அவரை கட்சி அலுவலகத்திற்கு அழைத்து வந்து பஸிலும், நமலும் பெரும் நாடகம் போட்டனர். ரணிலை ஜனாதிபதியாக்கியது நாட்டைக் கவனிப்பதற்காக என்று கட்சி ஆதரவாளர்களுக்குக் காட்டினார், கட்சியைக் கவனிக்க தினேஷை பிரதமராக்கினார். ஆனால் இன்று தினேஷ் ரணிலை கவனித்துக் கொள்கிறார்.

### 'தினேஷை எப்படி நீக்குவது...?'

தினேஷை நீக்க நாடாளுமன்றத்தில் 113 எம்பிக்களின் வாக்குகள் தேவை. அதற்கு ஜி.எல், - டலஸ் கூட்டணி மற்றும் விமல் மற்றும் உதயாவுடன் கண்டிப்பாகப் பேசவேண்டும். சிறு கட்சிகளிடமும் பேச வேண்டும். பொத்துட்டு ரணிலை ஒழிக்க முடியாது. கடந்த கால ஞானத்தை மீண்டும் கொண்டு வர முடியாது. ஆனால் பிரதமர் பதவி நல்ல துருப்புச்சீட்டு. மொட்டுக் கட்சியின் நம்பிக்கையைப் பெற்ற ரணிலுடன் மோதக்கூடிய பிரதமர் ஒருவரை நியமித்தால், மைத்திரிபாலவுக்கு நடந்ததே ரணிலுக்கும் நடக்கும். ராஜபக்சக்களைப் பாதுகாத்துமொட்டுவையும், ராஜபக்வையும் அழித்துவிடுவார்களா அல்லது இந்த நேரத்தில் முதலில் கட்சியையும் இரண்டாவதாக ராஜபக்சவையும்பற்றிசிந்திப்பாரா என்பதுதான் ராஜபக்சக்கள் சிந்திக்க வேண்டும்.

காலைக்கதிர் Kalaikkathir

# குவியலாக வீழ்ந்துகிடந்த பணத்தை அதிகாரிகளிடம் ஒப்படைத்த நபர்

## மாத்தறை இலங்கை வங்கியில் சம்பவம்



மாத்தறை இலங்கை வங்கியின் வாகன தரிப்பிடத்துக்கு அருகில் வியாழக்கிழமை மாலை வீழ்ந்து கிடந்த 50 லட்சம் ரூபா பணத்தை மாத்தறை நகரிலுள்ள கூரியர் சேவை நிறுவனம் ஒன்றின் உதவி முகாமையாளரான சந்தன உதயங்க (வயது - 38) என்பவர் கண்டெடுத்து அதனை வங்கியிடம் ஒப்படைத்தது.

வங்கி ஊழியர்கள் ஏரிஎம் களுக்கு எடுத்துச் சென்ற அல்லது மத்திய வங்கியில் வைப்பிலிட எடுத்துச் சென்ற 50 லட்சம் ரூபா பணமே வீழ்ந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

குவியல் குவியலாக தரையில் வீழ்ந்து காணப்பட்ட 50 லட்சம் ரூபா பெறுமதியான நோட்டுகளைப் போட்டோ எடுத்து, பின்னர் இது தொடர்பில் பாதுகாப்பு அதிகாரிக்கு தெரிவித்து வங்கி அதிகாரியை அழைத்து அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். (05)

# 5 மதுபான உற்பத்தி சாலைகளின் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தம்

செலுத்தவேண்டி இருந்த எஞ்சிய வரிதொகையை செலுத்துவதில் இருந்து தவிர்ந்து வந்த 5 மதுபான உற்பத்தி நிறுவனங்களின் அனுமதிப்பத்திரம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் இந்த 5 நிறுவனங்கள் மதுபானம் உற்பத்தி செய்வது மற்றும் மதுபானங்களை விநியோகிப்பதை தடை செய்துள்ளதாக மதுவரி ஆணையாளர் நாயகம் சமன் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த மதுபான உற்பத்தி நிறுவனங்கள் நீண்டகாலமாக எஞ்சிய வரி கட்டணத்தை செலுத்தாத, குறித்த நிறுவனங்களின் வருடாந்த அனுமதிப்பத்திரம் கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், அவற்றின் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படவில்லை எனவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 5 மதுபான உற்பத்தி நிறுனங்களின் அனுமதிமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாமல் அவற்றின் உற்பத்தி இதன் மூலம் நின்றுவிட்டாலும் மேலும் பல மதுபான உற்பத்தி நிறுவனங்கள் இயங்கிவருகின்றதால், சந்தையில் மதுபானத்துக்கு தட்டுப்பாடு ஏற்படப்போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# வான் மீது மரம் வீழ்ந்தமையால் மஹியங்கனையில் மூவர் காயம்







கண்டி - மஹியங்கனை பிரதான வீதியில் பல்லேகல பிரதேசத்தில் வியாழக்கிழமை வான் மீது மரம் ஒன்று வீழ்ந்ததில் வானில் பயணித்த மூவர் காயமடைந்துள்ளனர் என பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தால் வீதிக்கு அருகில் இருந்த பெட்டிக்கடை ஒன்று சேதமடைந்துள்ளது.

தொடர்சியாக பெய்த கடும் மழை காரணமாக குறித்த மரம் வீழ்ந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வீதியில் போக்குவரத்து முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து சேவைகளுக்காக மாற்று வீதிகளை பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர்.

மரத்தை அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

தொடர்புகளுக்கு: 0777 43 5557

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மில்கோ நிறுவனத்துக்கு புதிய தலைவர் தேவை

## அந்த நிறுவனச் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

மில்கோ நிறுவனத்தின் தலைவரை அந்த பதவியில் இருந்து நீக்கி அனைத்து தொழிற்சங்கங்களும் சிநேகமாக பணியாற்றிச் செல்ல முடியுமான சிறந்த தலைவர் ஒருவரை விரைவாக நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மில்கோ தேசிய சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் எஸ்.ஏ.துார கெலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மில்கோ நிறுவனத்தின் தற்போதைய தலைவர் ரேணுக பிரேராவை உடனடியாக அந்த பதவியில் இருந்து நீக்கி, அனைத்துதொழிற்சங்கங்களுடன் சிநேகபூர்வமாக வேளை செய்துகொண்டு செல்ல முடியுமான, கலந்துரையாடல் ஊடாக எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்க முடியுமான நிர்வாக திறமையுள்ள தலைவர் ஒருவரை விரைவாக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மில்கோ நிறுவனத்தின் தலைவர் எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் அனைத்து தொழிற்சங்கங்களை அறிவுறுத்தாமல் சுமார் 35 வருடங்களாக மாதச்சம்பளத்துக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிப்பதை நிறுத்தி, ஒரே அளவில் வைத்துக்கொள்ள 2022 ஓகஸ்ட் மாதத்தில் இருந்து அவர் தன்னிச்சையாக தீர்மானித்துள்ளார்.

தற்போது எழுந்துள்ள நிலை தொடர்பாக எமது தொழிற்சங்கங்கள் அவருடன் முரண்பாட்டுக்கு செல்லாமல் எமது நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை கருத்திற்கொண்டு கலந்துரையாடல் ஊடாக நடவைக்கைஎடுத்தோம்என்பதை எங்களுக்கு அறியத்தருகிறோம். - என்றுள்ளது. (05)

## 10 மில்லியன் ரூபா பண மோசடி சந்தேகநபருக்கு விளக்கமறியல்

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி 10 மில்லியனுக்கு அதிக பெறுமதியான பணத்தை மோசடி செய்த நபர் பொலன்னறுவை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட குறித்த நபரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட மேலதிக விசாரணையில் சந்தேகநபர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடி செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 42 வயதுடைய பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபருக்கு எதிராக சிலாபம், கனேமுல்ல, வெலிகட, மீகொட, ஆனமடுவ, கடவத்தை, பிலியந்தல மற்றும் குருநாகல் பகுதிகளில் இடம்பெற்ற 14 பண மோசடி சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் 10 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான பணத்தை மோசடி செய்துள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தால் 10 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ள அதேவேளை, பாணந்துறை மேல் நீதிமன்றத்தால் ஒரு பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் புதன்கிழமை பாணந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பொலன்னறுவை குற்றப்புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# சிறுவர்களின் உடல் எடை கொழும்பில் அதிகரிப்பு

கொழும்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே கணிசமான அளவு உடல் எடை அதிகரிப்பது குறித்து சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தவகையில், கொழும்பு மாவட்டத்தில் சிறுவர்களிடையே உடல் எடை அதிகரிப்பு 8 சதவீதமாக இருப்பதாக சுகாதார அமைச்சின் அண்மைய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

சிறுவர்களிடையே உடல் எடை அதிகரிப்பு ஒரு பிரச்சினையாக இருப்பதாக சுகாதார நிபுணர்கள் தெவிக்கின்றனர்.

உடல் எடை அதிகரிப்பு என்பது உடலில் ஆரோக்கியமற்ற எடையைக் கொண்ட ஒரு சிக்கலான கோளாறு ஆகும்.

இன்றைய காலகட்டத்தில் வளர்ந்த நாடுகளில் உடல் எடை அதிகரிப்பு ஒரு பெரிய பிரச்சினையாகிவிட்டது.

இது தொடர்பில் குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளரான விசேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவிக்கையில் -

எந்த வயதினருக்கும் உடல் எடை அதிகரிப்பது பிரச்சினையான விடயமாகும். ஆனால் குறிப்பாக சிறுவர்களுக்கு தங்கள் வாழ்க்கையின் பல கட்டங்களில் பெரும் சிக்கல்களை சந்திக்க நேரிடும்.

சிறுவர்களுக்கு இன்சுலின் குறைபாடு மற்றும் டைப் 2 நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், ஹைப்பர்லிபிடெமியா, கல்லீரல் மற்றும் சிறுநீரக நோய் மற்றும் இனப்பெருக்க செயலிழப்பு ஆகியவை ஏற்பட வழிவகுகின்றது.

காபோகைதரேற் நிறைந்த உணவுகளை உட்கொள்வது உடல் பருமனுக்கு மிக முக்கிய காரணியாக இருப்பதால், கொழும்பில் பெரும்பாலும் மாப்பொருள் சார்ந்த உணவுகள் உட்கொள்வதால்தான் உடல் பருமன் அதிகம் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

நிலவும் பொருளாதார நெருக்கடியில் புரதம் நிறைந்த உணவுப் பொருள்களை வாங்குவதில் சிரமம் உள்ளது. எனினும், மாப்பொருள் மிக அதிகளவில் அடங்கிய உணவுகளை நாம் குறைத்து அனைத்து சத்துக்களும் நிறைந்த உணவை வழங்குவதில் கவனம் செலுத்துமாறு பெற்றோர்களை வலியுறுத்தியுள்ளார். (05)

# இரு பஸ்கள் மோதியதில் 7 மாணவர்கள் காயம்

ஹொரணையிலிருந்து மஹரகம நோக்கி செல்லும் பிரதான வீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இரண்டு பஸ்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் 7 பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என ஹொரணை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்த மாணவர்கள் ஹொரண ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். ஹொரணையிலிருந்து மஹரகம நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும் ஹொரணையிலிருந்து குடா உடுவ நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில் பஸ் சாரதிகள் இருவரையும் ஹொரணை பொலிஸார் கைது செய்துள்ளனர். (05)



## காஸ் விலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு விலை 75 முதல் 90 ரூபாவிற்கு இடையே உயர்வடையலாம் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

திருத்தப்பட்ட விலைகள் இன்று அறிவிக்கப்படுமெனவும் நடைமுறைச்சாத்தியமான விலைகளையே அமுலாக்கிவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பலாலியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தை வந்தடைந்த அவரை யாழ் மாவட்ட குற்றத் தடுப்புபிரிவு பொறுப்பதிகாரி, பொலிஸ்பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான குழுவினர் கைது செய்தனர்.

27 வயதுடைய சந்தேக நபரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## காலநிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கமுற்படும்பொருளாதாரம், போட்டித்தன்மை மிக்கதாகவும், டிஜிட்டல் மற்றும் வலுசக்தி, பசுமை துறைகளை மையப்படுத்தியதாக அமைந்திருக்கும். இதுகுறித்து வரவு, செலவு திட்டத்தின் பின்னர் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்தாலோசிக்க எதிர்பார்த்திருக்கின்றோம்.

மேற்படி வழிமுறையின் ஊடாக மாத்திரமே இலங்கையை அபிவிருத்தி செய்யமுடியும், விவசாயத்துறையை நவீனமயப்படுத்தல், சுற்றுலா வர்த்தகத்தை விரிவுபடுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் ஊடாக அதனை சாதிக்க முடியும், அதற்கான சாத்தியங்களை அறிந்துகொள்ள வேண்டும். இலங்கை சிறிய நாடு என்பதால் பல்வேறு நன்மைகள் கிட்டும். இலங்கையில் பெரிய உலர் வலயம் ஒன்று உள்ளது.

22 மில்லியன் சனத்தொகையைக் கொண்டுள்ளோம். அதனால் நாம் தன்னிறைவான பசுமை வலுசக்தியை கொண்டுள்ளோம். அதனால் நாம் சூரிய சக்தி தொடர்பில் மாத்திரமின்றி காற்றின் சக்தி மற்றும் ஹைட்ரஜன் சக்தி தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அதற்காக திட்டங்களை வகுப்பதற்கானநிபுணத்துவத்தெரிவு, இலங்கையிடம் தற்போதைக்கு இல்லை. எனவே, அந்த நிபுணத்துவத்தைப் பெறுவதற்கு ஒரு புதிய திட்டத்தைத் தயாரிப்பதற்காக, பலதரப்பட்ட அபிவிருத்தி வங்கிகள் மற்றும்எமதுஇருதரப்புபங்குதாரர்கள் பக்கமாக செல்கிறோம்.

நாம் இப்போது பசுமைப் பொருளாதாரத்திற்கு கடந்த வருடத்தில்தான்காலநிலைசெழிப்புத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்துக்கான கோப்-28 மாநாட்டில் நிகர பூச்சிய உமிழ்வுத் திட்டத்தை முன்வைக்க எதிர்பார்க்கிறோம்.

2040ஆம் ஆண்டுக்குள் நிகர பூச்சிய உமிழ்வை அடைய முயற்சிக்கிறோம். அது கடினமான இலக்கல்ல. இருப்பினும் அதற்கு ஒரு தொகையை செலவிட வேண்டியிருக்கும். நிகர பூஜ்ஜிய உமிழ்வுத் திட்டத்தை மேற்கொள்ள 20வருடங்களுக்காக100பில்லியன் அமெரிக்கடொலர்களுக்கு அதிகமாக தேவைப்படும்.

இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் இந்த மாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில், சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்தை நிறுவ எதிர்பார்க்கிறோம். இந்த காலநிலை மாற்ற பல்கலைக்கழகம் இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக அல்லாமல் சர்வதேச பங்குதாரர்களின் பல்கலைக் கழகமாகவும் செயற்படும். அதன் நிர்மாணப் பணிகளுக்காக கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் ஏற்கனவே 600 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்திற்கு நிதியளிக்கும் திறனை இலங்கை மேம்படுத்தி வருகிறது. காலநிலை நிதி குறித்த திறன் மற்றும் கலந்துரையாடல்கள் உலகின் சில பெரிய நாடுகளுக்குமட்டுமேமட்டுப்பட்டவிடயமாக உள்ளது. அனைவருக்கும் அந்த திறன் இல்லை. நாம் பசுமை பொருளாதாரத்தை நோக்கி பயணிப்பதால். மேற்படி நிதியளிப்புச் செயற்பாடுகளையும் ஊக்குவிக்கிறோம்.

அதற்கான உயர்மட்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரஸ்திரத்தன்மைதொடர்பான ஆலோசகர், நிதியமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய இக்குழு இலங்கைக்கு உள்ளான மாற்றங்கள் தொடர்பில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் உலக அளவில் நடைபெறும் மாநாடுகளிலும் குறித்த குழுவே பங்கேற்கிறது. உலகின் தென் பகுதிகளில்காலநிலைதொடர்பிலான நிபுணத்துவ தெரிவு இல்லாமல் உள்ளது.

இந்த கலந்துரையாடல் கோப்-28 மாநாட்டிற்கு முன்னோடியாக அமையும். கோப்-28 என்பது உலகளாவியமதிப்பீட்டைமேற்கொள்ளும்முக்கியஅமர்வாகும். இலங்கை நிச்சயமாக அதில் பங்கேற்கும் அதேநேரம் அதன் வெற்றிக்கான முக்கியமான பரிந்துரைகளையும் முன்மொழியும் என்றார்.

## ஐரோப்பிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்லாந்து, ஜேர்மனி மற்றும் லித்துவேனியா போன்ற நாடுகளைச்சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர்.

இச்சந்திப்பின்போது, சாபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அண்மைக் காலத்தில் பல சாதகமான நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டிருப்ப தாகவும், அதில் ஊழல் ஒழிப்புச் சட்டம் நிதிக் கட்டுப்பாட்டை வினைத்திறனாகவும், வெளிப்படையான முறையிலும் முன்னெடுப்பதற்காகப்நாடாளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தை நிறுவுதல் போன்றவை உள்ளடங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், நல்லிணக்க செயற்பாடுகள் போன்றவை குறித்தும் இந்தக் குழுவினர் கலந்துரையாடினர்.

இந்தத் தூதுக்குழுவினர் நாடாளுமன்றத்தில் சுற்றுப் பயணமொன்றையும் மேற்கொண்டிருந்தனர். அதேநேரம், இந்தத் தூதுக்குழுவினர் இலங்கை-ஐரோப்பிய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் உறுப்பினர்களைச் சந்தித்திருந்ததுடன், சபாநாயகரினால் வழங்கப்பட்ட மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டனர்.

அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, இராஜாங்கஅமைச்சர்களானடயானா கமகே, தேனுக விதானகமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், கபில அதுகோரல ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.

அத்துடன், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர, பாராளுமன்றபணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குரலத்ன ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கெடுத்திருந்தனர்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஓட்டோ கட்டணங்களால் ஓடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# யாழில் 'ஸ்டேட் பாங் ஒப் இந்தியா' கிளை அமைச்சர் நிர்மலா சீதாராமனால் திறப்பு







இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணம் பலாலியில் உள்ள விமான படையினரின் விமான தளத்தின் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு வந்த அமைச்சரை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் உள்ளிட்டோர் நேரில் சென்று வரவேற்றனர்.

இதன்போது, இந்திய அமைச்சருடன் இந்திய தூதுவர் கோபால் பாக்லே, இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உள்ளிட்ட இந்திய உயர்மட்ட குழுவும் வருகை தந்தது.

குறித்த குழுவினர் யாழ்ப்பாணம் கலாசார மையத்தை பார்வையிட்டதுடன், நல்லூர் கந்தசுவாமி கோயில் மற்றும் யாழ்.பொது நூலகம் ஆகியவற்றிக்கும் சென்றனர்.

அதேவேளை இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் யாழ்ப்பாணத்தில் 'ஸ்டேட் பாங் ஒப் இந்தியா' வின் கிளையையும் திறந்து வைத்தார். (05)

## நல்லூர் கந்தனை வழிபட்டார் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா





மூன்று நாள்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது, இந்திய தூதுவர் கோபால் பாக்லே, இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவ பாலசுந்தரன், யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் உள்ளிட்ட பலரும் உடன் சென்றிருந்தனர்.

இந்நிலையில் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு வருகைதந்த அவர், அங்கு இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டிருந்ததோடு, அங்கு கூடியிருந்த சிறுவர் சிறுமியர்களுடன் கலந்துரையாடி புகைப்படங்கள் எடுத்துக் கொண்டார். (05)

## பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடு 118 இற்கு உடனடியாக அறிவிக்கலாம்

### மீண்டும் தெரிவிக்கிறார் பொலிஸ் ஊடக பேச்சாளர்

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடு செய்ய விரும்பினால் 118 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ மீண்டும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த தொலைபேசி இலக்கம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சால் பராமரிக்கப்படுகிறது.

இந்த எண்ணுக்கு பொதுமக்களிடம் இருந்து வரும் அழைப்புகள் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு அதன் பிறகு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்படும் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (05)

## 14 வயது மகளை கத்தியால் குத்திய தந்தை கைதானார்

மாத்தளை பிரதேசத்தில் தனது 14 வயது மகளை கத்தியால் குத்தி காயப்படுத்திய தந்தை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

கத்திக்குத்துக்குள்ளானவர் மாத்தளை – பலாபத்வல பகுதியை சேர்ந்த 14 வயது சிறுமி ஆவார். சிறுமியின் கைகள், காது மற்றும் நெற்றி பகுதி என்பன கத்தியால் குத்தப்பட்ட நிலையில் சிறுமி மாத்தளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொரிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வதேச காலநிலை பல்கலைக்கழகத்தை அமைக்க கொத்மலையில் காணி ஒதுக்கீடு

### ஜனாதிபதி ரணில் கூறுகிறார்

சர்வதேச காலநிலை பல்கலைக் கழகத்தை நிர்மாணிக்க கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்டிய 600 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை காலநிலை அனர்த்தங்களுக்குஈடுகொடுக்கவும், பசுமை பொருளாதார மாற்றத்துக்கும் தேவையான திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற முதலாவது சர்வதேச காலநிலை மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் தான் காலநிலை செழிப்புத் திட்டத்தை முன்வைத்திருந்ததாகவும், இவ்வருடத்துக்கான சிகியுபீ 28 மாநாட்டில் நிகர பூஜ்ஜிய உமிழ்வுத் திட்டத்தை முன்வைக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க –

'பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வந்து, நாங்கள் உருவாக்க முற்படும் பொருளாதாரம், போட்டித்தன்மை மிக்கதாகவும், டிஜிற்றல் மற்றும் வலுசக்தி, பசுமை துறைகளை மையப்படுத்தியதாகவும் அமைந்திருக்கும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இதுகுறித்து வரவு – செலவுத் திட்டத்தின் பின்னர் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்தாலோசிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேற்படி வழிமுறையின் ஊடாக மாத்திரமே இலங்கையை அபிவிருத்தி செய்ய முடியுமென்றும், விவசாயத் துறையை நவீனமயப்படுத்தல், சுற்றுலா வர்த்தகத்தை விரிவுபடுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் ஊடாக அதனைச் சாதிக்க முடியும் என்பதோடு, அதற்கான சாத்தியங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்றும் இலங்கை சிறிய நாடு என்பதால் பல்வேறு நன்மைகள் கிட்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில் பெரிய உலர் வலயம் ஒன்று உள்ளது. 22 மில்லியன் சனத்தொகையைக் கொண்டுள்ளோம். அதனால் நாம் தன்னிறைவான பசுமை வலுசக்தியை கொண்டுள்ளோம். அதனால் நாம் சூரிய சக்தி தொடர்பில் மாத்திரமின்றி காற்றின் சக்தி மற்றும் ஹைட்ரஜன் சக்தி தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அதற்காக திட்டங்களை வகுப்பதற்கான நிபுணத்துவத் தெரிவு, இலங்கையிடம் தற்போதைக்கு இல்லை. எனவே, அந்த நிபுணத்துவத்தைப் பெறுவதற்கு ஒரு புதிய திட்டத்தைத் தயாரிப்பதற்காக, பலதரப்பட்ட அபிவிருத்திவங்கிகள் மற்றும் எமது இருதரப்பு பங்குதார்கள் பக்கமாக செல்கிறோம். நாம் இப்போது பசுமைப் பொருளாதாரத்திற்குக் கடந்த வருடத்தில் தான் காலநிலை செழிப்புத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்துக்கான மாநாட்டில் நிகர பூஜ்ஜிய உமிழ்வுத் திட்டத்தை முன்வைக்க எதிர்பார்க்கிறோம்.

2040 ஆம் ஆண்டுக்குள் நிகர பூச்சிய உமிழ்வை அடைய முயற்சிக்கிறோம். அது கடினமான இலக்கல்ல. இருப்பினும் அதற்கு ஒரு தொகையை செலவிட வேண்டியிருக்கும். நிகர பூஜ்ஜிய உமிழ்வுத் திட்டத்தை மேற்கொள்ள 20 வருடங்களுக்காக 100 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமாகத் தேவைப்படும்.

இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் இந்த மாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில், சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்தை நிறுவ எதிர்பார்க்கிறோம். இந்த காலநிலை மாற்ற பல்கலைக்கழகம் இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக அல்லாமல் சர்வதேச பங்குதாரர்களின் பல்கலைக்கழகமாகவும் செயற்படும். அதன் நிர்மாணப் பணிகளுக்காக கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் ஏற்கனவே 600 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்திற்கு நிதியளிக்கும் திறனை இலங்கை மேம்படுத்தி வருகிறது. காலநிலை நிதி குறித்த திறன் மற்றும் கலந்துரையாடல்கள் உலகின் சில பெரிய நாடுகளுக்கு மட்டுமே மட்டுப்பட்ட விடய மாக உள்ளது. அனைவருக்கும் அந்தத் திறன் இல்லை. நாம் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி பயணிப்பதால் மேற்படி நிதியளிப்புச் செயற்பாடுகளையும் ஊக்குவிக்கிறோம்.

அதற்கான உயர்மட்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான ஆலோசகர், நிதியமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய இக்குழு இலங்கைக்கு உள்ளான மாற்றங்கள் தொடர்பில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் உலக அளவில் நடைபெறும் மாநாடுகளிலும் குறித்த குழுவே பங்கேற்கிறது. உலகின் தென் பகுதிகளில் காலநிலை தொடர்பிலான நிபுணத்துவ தெரிவு இல்லாமல் உள்ளது.

இந்த கலந்துரையாடல் சி.கியு.பீ 28 மாநாட்டிற்கு முன்னோடியாக அமையும். சி.கியு.பி 28 என்பது உலகளாவிய மதிப்பீட்டை மேற்கொள்ளும் முக்கிய அமர்வாகும். இலங்கை நிச்சயமாக அதில் பங்கேற்கும் அதேநேரம் அதன் வெற்றிக்கான முக்கியமான பரிந்துரைகளையும் முன்மொழியும். – என்று ஜனாதிபதி தெரிவித்தார். (05)

## மஸ்கெலியா நல்லத்தண்ணி பகுதி வர்த்தக நிலையத்தில் கொள்ளை

மஸ்கெலியா நல்லத்தண்ணி நகருக்கு செல்லும் பிரதான வீதியிலுள்ள வர்த்தக நிலையத்தில் புதன்கிழமை இரவு சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையர்கள் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இது குறித்து நல்லதண்ணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

புதன்கிழமை இரவு இப்பகுதியில் மழை பெய்துகொண்டிருந்த போது இவ்வாறு கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் இருந்து தடயவியல் அதிகாரிகள் வியாழக்கிழமை சம்பவ இடத்துக்கு சென்று கை ரேகைகளை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இது குறித்து சகல மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என நல்லதண்ணி பொலிஸ் பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார். (05)

## அப்பியாச கொப்பிகளுக்கு 30 சதவீத விலைக்கழிவுகள்

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகளுக்கு 30 வீத விலைக்கழிவு வழங்கப்படுவதாக தேசிய அச்சக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

குறித்த விலைக்கழிவில் அப்பியாசக் கொப்பிகளைப் பெற்றுக்கொள்ள பாடசாலை அதிபரின் கடிதத்துடன் தேசிய அச்சகக் கூட்டுத்தாபனம் அல்லது அதனது விற்பனைக் கிளைகளுக்கு வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்களின் உத்தரவுகளுக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் மட்டுமே நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்

## அமைச்சர் டக்ளஸ் அபரிமித நம்பிக்கை

நாடு எதிர்கொள்ளுகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவால் தீர்வினைக்காண முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் தேர்தல்கள் நடைபெறுகின்றபோது, மக்கள் தங்களின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவார்களாயின், தொடர்ந்து வருகின்ற ஐந்து வருடங்களில் நாடு சுபீட்சமான நிலையை அடையும் எனவும் தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நிறுவுநர் ப. செபராஜாசிங்கத்தின் நினைவு தினம் மற்றும் பரிசளிப்பு விழாவின் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

எமது தமிழ் தலைவர்கள் முன்னெடுத்த போராட்டங்கள் தோல்விகண்ட நிலையில் தான் அன்றைய காலகட்டத்தில் தென்னிலங்கையில் ஆட்சியில் இருந்தவர்களால் எங்களுடைய கைகளில் ஓர் ஆயுதப் போராட்டம் வலிந்து கொடுக்கப்பட்டது.

ஆனால் அந்த ஆயுத போராட்டமும் ஒரு கட்டத்துக்கு பிறகு திசை திரும்பி பலவீனப்பட்டு போய்விட்டது.

இவ்வாறு பலவீனப்பட்டு போய்க் கொண்டிருந்த பொழுதுதான் 1987 களில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற ஒரு பொன்னான வாய்ப்பு கிடைத்தது.

அதை நாங்கள் பின்பற்றி இருப்போமாக இருந்தால் இன்று நாம் பல மடங்கு முன்னேற்றகரமான ஒரு சூழலில் வாழ்ந்து கொண்டிருந்திப்போம் என்று நினைக்கின்றேன். ஆனால் அது வீணடிக்கப்பட்டுவிட்டது.





நாட்டில் நடைபெற்ற அழிவு யுத்தம் காரணமாக தேவையற்ற பொருளாதார செலவுகள் மற்றும் யுத்தத்துக்காக வெளிநாடுகளில் பெற்ற கடன்களும் அதைவிட நாட்டினுடைய ஏனைய தேவைகளுக்காக பெறப்பட்ட கடன்களும் சரியான ஒரு பொறிமுறையை நோக்கி கையாளப்படாது போய்விட்டது. இதனால் நாட்டை முன் கொண்டு செல்ல முடியாத நிலைக்கு எமது நாடு தள்ளப்பட்டது.

இவ்வாறான நெருக்கடி நிறைந்த காலகட்டத்தில் இந்த நாட்டை பொறுப்பெடுத்த இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை சரியான பாதையில் கொண்டு சென்று நிலமைகளை சீர்செய்து வருகின்றார். அதில் வெற்றியும் கிடைத்து வருகிறது.

அந்தவகையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் இன்றைய ஜனாதிபதி வெற்றி பெறுவாராக இருந்தால், தொடர்ந்து வருகின்ற ஐந்து வருடத்தில் நாடு இன்னும் பல மடங்கு முன்னோக்கி செல்லும் என்பது என்னுடைய நம்பிக்கை.

பொதுவாக நான் என்னுடைய அனுபவங்களை என்னுடைய நம்பிக்கையைதான் எப்பொழுதும் வெளிப்படுத்தி வருகின்றேன்.

என்னுடைய வரலாற்றை எடுத்துக்கொண்டால் ஏறக்குறைய 15 வருட ஆயுதப் போராட்ட வரலாறும் 30 வருடத்துக்கு மேலான நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் வரலாறும் அதனூடான அனுபவங்களும் எனக்கு இருக்கின்றன.

இதேநேரம் அடுத்த அரசாங்கங்கள் வந்தாலும் என்னுடைய நிலைமை இவ்வாறானதா?

அத்துடன் எனது அணுகுமுறையானது வெறுமனே உசுப்பேற்றும் அரசியலை பேசுவதுடன் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை தீராப் பிரச்சினைகளாக வைத்திருந்து வெறும் வாக்குககளை அபகரிப்பதற்கான அரசியல் இல்லை.

நான் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டுடனே நல்லிணக்கத்தை வளர்த்து வருகின்றேன். அதில் வெற்றி காணமுடியும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு என்றும் தெரிவித்த அமைச்சர் இந்த பாடசாலையின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கான அனைத்து செயற்பாடுகளிலும் பாடசாலை சமூகத்தடன் சேர்ந்து தன்னுடைய பங்களிப்பும் முழுமையாக கிடைக்கப்பெறும் என்றும் உறுதிபடத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மலையகத் தமிழர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம்

## தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை உறுதி

இலங்கையில் வாழும் மலையக மக்களுக்கும் இந்தியாவில் வாழும் மலையக மக்களுக்கும் பாரதிய ஜனதா கட்சி என்றும் ஆதரவாக இருக்கும். அவர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம் என பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

கொழும்பு சுகததாஸ அரங்கில் இடம்பெற்ற 'நாம் 200' தேசிய நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

'நாம் 200' என்பது கடுமையான பாதைகளை நினைவுபடுத்துகிறது. பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த மலையக மூதாதையர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை உருவாக்கி நாட்டை வளப்படுத்தினார்கள்.

கடின உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை மற்றும் போராட்டம் ஆகியவற்றை மூலதனமாகக் கொண்டு மலையக மக்கள் இந்த 200 ஆண்டுகாலத்தை நிறைவு செய்துள்ளார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பல துயரங்களை அனுபவித்த மக்கள் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டதன் பின்னரும் அரசியல் ரீதியில் பிரித்தாளப்பட்டார்கள்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தால் சுமார் 3 லட்சம் மலையக தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களில் குடியேறி புதிய வாழ்க்கையை வாழ ஆரம்பித்தார்கள்.

இந்த 200 ஆண்டு காலத்தில் உலகில் வேறெந்தவொரு இனமும் இவ்வாறானதொரு நிலையை எதிர்கொள்ளவில்லை. தனிவீடு வேண்டும் என்பது பெருந்தோட்ட மக்களின் பிரதான கோரிக்கையாக உள்ளது.

இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மலையகத்தில் இந்திய வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வெகு விரைவில் இந்தத் திட்டம் நிறைவுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறோம். பெருந்தோட்ட மக்களுக்கு சொந்த வீட்டுடன் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் உறுதியளித்துள்ளதை வரவேற்கிறோம்.

2017 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி நுவரெலியா மாவட்டத்துக்கு சென்று அங்கு வாழும் மலையக மக்களைச் சந்தித்து உரையாடினார்.

பெருந்தோட்ட மக்களின் உழைப்பு மற்றும் விடாமுயற்சியை பிரதமர் நரேந்திர மோடி வியந்து பார்த்து அதனை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கொண்டார்.

இலங்கையில் உள்ள மலையக மக்களுக்கும் இந்தியாவில் வாழும் மலையக மக்களுக்கும் பாரதிய ஜனதா கட்சி ஆதரவாக இருக்கும். அவர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்போம். - என்றார். (05)

# பிரமிட் திட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஐந்து பேர் கைது

ஒன்மெக்ஸ் டி.ரி. நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஐவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஐவரையும் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரமிட் பண விவகாரம் தொடர்பாக நடந்தப்பட்ட விசாரணைகளின் பின்னரே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நிறுவனம் இலங்கை மத்தியவங்கியால் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பூகோள அரசியலுடன் கடலட்டை பண்ணைகளை தொடர்புபடுத்துவது அடிப்படையேதுமற்ற ஒன்று

## அமைச்சர் டக்ளஸ் கூறுகின்றார்

எமது பிரதேசத்திலுள்ள வளங்களை எமது மக்கள் முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பு என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடலட்டை குஞ்சு விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எமது மக்களால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகளை பூகோள அரசியலுடன் தொடர்புபடுத்துவது அடிப்படை அற்ற விடயம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடலட்டை பண்ணை விடயத்தில் நாம் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் ஆனால், மக்கள் பொருளாதார ரீதியில் வலுவடைவதை விரும்பாத அரசியல்வாதிகள் சிலரும், கடற்றொழிலாளர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்ற சிலரும், கடலட்டைப்பண்ணை தொடர்பாகத் தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமை கவலையளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (05)

# தேசிய புலனாய்வு பிரிவுடன் இணைந்ததாக புதிய சமூகப் புலனாய்வுப் பிரிவு ஸ்தாபிப்பு

தேசிய புலனாய்வுப் பிரிவுடன் இணைந்ததாக புதிய சமூக புலனாய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை வகுப்புகளில் இடம்பெறும் பல்வேறு சீர்கேடுகளைத் தடுக்கப் புதிய புலனாய்வு பிரிவின் ஊடாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு ஆரம்பித்துள்ளோம். இதன்படி, பாடசாலைகளில் இடம்பெறும் தவறான செயல்கள் மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கும் அவற்றை ஒழிப்பதற்கும் இந்தப் புதிய புலனாய்வுப் பிரிவு செயற்படும் என அவர் தெரிவித்துள்ளார். (05)

# பெருந்தோட்ட கைத் தொழில் அமைச்சுக்கு புதிய செயலர்

*விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக பி.எஸ்.ஏ.ஜே. தர்மகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டது.*

*நவம்பர் 2 ஆம் திகதி ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*(05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.11.2023இல் வெளியிடப்பெற்றது.